


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 04 | Issue: 011 | 4 Pages | 11.08.2026 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 010 | 4 பக்கங்கள் | 11.08.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயும் காத்தல் அரிது**

**விளக்கம்:** நல்ல பண்புகளாகிய மலையின்மேல் ஏறிநின்ற பெரியோர், ஒரு கணப்பொழுதே சினம் கொள்வார் ஆயினும் அதிலிருந்து ஒருவரைக் காத்தல் அரிதாகும்.

## பள்ளி விடுதியில் 6 மாணவிகளை கடித்த பாம்பு: 3 பேர் உயிரிழந்த சோகம் : விசாரணைக்கு உத்தரவு

மும்பை, ஆக. 11

மராட்டிய மாநிலம் கட்சிரோலியில் உள்ள அரசு உதவி பெறும் உறைவிடப் பள்ளியில் பாம்பு கடித்ததில் 3 மாணவிகள் உயிரிழந்தனர். மேலும் 3 மாணவிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். தனோரா தாலுகா, ஜப்தலை கிராமத்தில் அரசு உதவி பெறும் பழங்குடியினர் உறைவிடப் பள்ளி அமைந்துள்ளது. இந்த பள்ளியின் விடுதியில் நேற்று இரவில் மாணவிகள் தரையில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென அறைக்குள் நுழைந்த பாம்பு அங்கிருந்த 6 மாணவிகளைகடித்தது. இதில் 8, 12 மற்றும் 14 வயதுடைய மூன்று மாணவிகள் உயிரிழந்தனர். மேலும் மூன்று மாணவிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மருத்துவர்கள் அவர்களது உடல்நிலையை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் எப்படி நிகழ்ந்தது, மாணவர்கள் தங்கியிருந்த இடத்தில் போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் இருந்தனவா? பள்ளி நிர்வாகம் தேவையான பாதுகாப்பு விதிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கடைப்பிடித்ததா? என்பதைக் கண்டறிய விரிவான விசாரணை நடத்தப்படும் என்று மாவட்ட கலெக்டர் அவிஷ்யந்த் பாண்டா தெரிவித்துள்ளார். மேலும், பழங்குடியினர் மேம்பாட்டுத் துறையின் குழுக்கள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு தேவையான தகவல்களைச் சேகரிப்பார்கள் என்றும், விசாரணையின்போது அலட்சியம் அல்லது பாதுகாப்புக் குறைபாடுகள் கண்டறியப்பட்டால் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

## ஒரே பைக்கில் 100 ஹாரன்கள்; பறிமுதல் செய்த போலீஸ்




டேராடூன், ஆக. 11

உத்தரகாண்டில் போக்குவரத்து விதிகளை முற்றிலும் மீறி, சுமார் 100 ஹாரன்கள் பொருத்தப்பட்ட விசித்திரமான பைக் ஒன்றை போலீசார் அதிரடியாகப் பறிமுதல் செய்தனர். உத்தரகாண்ட் மாநிலத்தில் கன்வார் யாத்திரை காலக்கட்டத்தில் ஹரித்துவாரில் உள்ள சங்கராச்சாரி சவுக் பகுதியில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது காதை பிளக்கும் ஒலியுடன் வந்த ஒரு பைக்கை போலீசார் தடுத்து நிறுத்தினர். அந்த பைக்கை சோதித்தபோது, அதன் முன்பக்கத்திலும் பக்கவாட்டிலும் அடுக்கடுக்காக 100 ஹாரன்கள் மற்றும் நார்த் விளக்குகள் பொருத்தப்பட்டு, முற்றிலும் உருமாற்றம் செய்யப்பட்டிருந்தது தெரியவந்தது. பறிமுதல் எச்சரிக்கை

இதையடுத்து, ஒலி மாசு மற்றும் போக்குவரத்து விதிமீறல் காரணங்களுக்காக அந்த வாகனத்தை கான்கல் போலீசார் உடனடியாகப் பறிமுதல் செய்து, வாகன ஓட்டிக்கு அபராதம் விதித்தனர். பறிமுதல் செய்யப்பட்ட அந்த பைக்கை போலீஸ் அதிகாரி ஒருவர் ஓட்டிச் செல்லும் வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. சாலை பாதுகாப்பு விதிகளை மீறி இதுபோன்ற ஆபத்தான மாற்றங்களைச் செய்ய வேண்டாம் என போலீசார் எச்சரித்துள்ளனர்.

## காவிரி நீர் வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் வரும் 13ம் தேதி விசாரணை





புதுடெல்லி, ஆக. 12

காவிரி நீர் திறக்கக்கோரி தமிழக அரசு தொடர்ந்த மனு வரும்13ம் தேதி சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வருகிறது. காவிரி நதிநீர் பிரச்சினை மற்றும் மேகதாது அணை விவகாரம் தொடர்பாக, கர்நாடகா முதல் மந்திரி டி.கே. சிவக்குமாரை, ஆக.3ம் தேதி பெங்களூருவில் சந்தித்து பேச, தமிழக முதல்அமைச்சர் விஜய் திட்டமிட்டு இருந்தார். இதற்காக, கர்நாடகா முதல்மந்திரிக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அவரது ஒப்புதலும் பெறப்பட்டு இருந்தது. சூழ்நிலை சரியில்லாததால், முதல்அமைச்சர் விஜய் பெங்களூரு வருவதை தவிர்க்க வேண்டும் என, கர்நாடகா முதல் மந்திரி டி.கே.சிவக்குமார் கூறினார். இதனையடுத்து கர்நாடகத்தின் அலட்சிய போக்கால், காவிரியை மட்டுமே வாழ்வாதாரமாக கொண்டுள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நடப்பு பாசன ஆண்டில் 26,954 டிம் சி நீர் பற்றாக்குறையை வழங்க கர்நாடகாவுக்கு உத்தரவிட வேண்டும். ஆகஸ்12குள் பிலிகுண்டுலுவுக்கு வினாடிக்கு 3,500 கன அடி நீர் திறக்க வேண்டும் என தமிழகத்திற்கு உரிய நீர் திறக்க, கர்நாடகாவிற்குஉத்தரவிடவலியுறுத்திகடந்த3ம்தேதிசுப்ரீம்கோர்ட்டில் தமிழக அரசு மனுத்தாக்கல் செய்தது. மனுவை விசாரணைக்கு எடுக்க வேண்டுமெனதலைமை நீதிபதி சூர்யகாந்த் முன்பு தமிழக அரசு சார்பில் முறையீடு செய்யப்பட்டது. இந்தநிலையில், காவிரி நீரைக் கர்நாடக அரசு திறந்துவிட உத்தரவு அளிக்கக் கோரி தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் வரும் 13ம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு மனுவோடு, திமுக தாக்கல் செய்துள்ள மனுவும் சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட உள்ளது. மேலும் படிக்க

# நெல், கரும்பு கொள்முதலுக்கான ஊக்கத்தொகை உயர்வு: சட்டசபையில் முதல்அமைச்சர் விஜய் அறிவிப்பு



சென்னை, ஆக. 11

தமிழ்நாடு சட்டசபையின் 110 விதியின் கீழ் நெல் கரும்பு விவசாயிகளுக்கான ஊக்கத்தொகை குறித்து முதல் அமைச்சர் விஜய் கூறியதாவது; விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் நோக்கில் நெல், கரும்புக்கான ஊக்கத்தொகையை அதிகரிக்க முடிவு செய்து உள்ளோம். சன்ன ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.289, பொதுரக நெல் குவிண்டாலுக்கு ரூ.150ம் உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் விவசாயிகளுக்கு நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையுடன் சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.2,750, பொது நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.2,600 கிடைக்கும். சர்க்கரை ஆலைகளில் கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு மத்திய அரசு ரூ.3290.50 வழங்குகிறது. அத்துடன் கரும்புக்கான ஊக்கத்தொகையாக டன்னுக்கு ரூ.709.50 தமிழக அரசு சார்பில் வழங்கப்படும். இதன் மூலம் கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 4,000 விலையாக கிடைக்கும். நெல்லுக்கு ரூ.150 வரை உயர்த்தப்பட்டுள்ளது வரலாற்றிலேயே இதுதான் முதல் முறை. அதேபோல, கரும்பு டன் 134க்கு மேல் வழங்குவதும் இதுதான் முதல் முறையாகும். நமது அரசு விவசாயிகளை விட்டுவிடாமல் தோளோடு தோள்கொடுத்து, விவசாயிகளுக்கு எப்போதும் உறுதுணையாக இருக்கும்." என்றார்.

## ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பு



சென்னை, ஆக. 11

கர்நாடகாவில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த தொடர் மழை காரணமாக அங்குள்ள அணைகள் நிரம்பி வருகின்றன. இதன் காரணமாக கபினி அணையில் இருந்து கடந்த 1ந் தேதி முதல் தமிழகத்திற்கு காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. குறிப்பாக மழையின் தீவிரத்தை பொறுத்து அந்த மாநில அரசு தண்ணீரை அதிகரித்தும், குறைத்தும் திறந்து விட்டு வருகிறது. இதன்காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து கடந்த சில நாட்களாக குறைந்து வருகிறது. குறிப்பாக நேற்று முன்தினம் வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 11 மணிநிலவரப்படி வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடியாக குறைந்தது. தண்ணீர் வரத்து குறைந்த நிலையில், விடுமுறை நாளான நேற்று சுற்றுலா பயணிகள் ஒகேனக்கல்லில் பரிசல் சவாரி செய்தும், அருவியில் குளித்தும் மகிழ்ந்தனர்.

இந்த நிலையில், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று வினாடிக்கு 5,000 கன அடியாக இருந்த நீர்வரத்து, தற்போது 8,000 கன அடியாக அதிகரித்துள்ளது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்தால் ஒகேனக்கல்லில் பரிசல் சவாரி தடை செய்ய வாய்ப்பு உள்ளது. கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்துக்கு வினாடிக்கு 13 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது.

## விஜய்யின் அரசியல் கேரளத்தில் எடுபடாது எஸ்.டி.பி.ஐ. தேசிய தலைவர் எம்.கே.பைஜி பேட்டி




சென்னை, ஆக. 11

எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மதுரை மண்டலம் சார்பாக தலைவர்கள் சங்கமம் நிகழ்ச்சி, உத்தங்குடி பகுதியில் நடந்தது. மண்டல செயலாளர் முஜிபூர் ரகு மான் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக கட்சியின் தேசிய தலைவர் எம்.கே.பைஜி கலந்து கொண்டு பேசினார். தேசிய பொதுச்செய லாளர் மஜித் பைஜி, மாநில தலைவர் நெல்லை முபாரக், தேசிய பொரு ளாளர் அப்துல்சத்தார் ஆகியோர் பேசினர். தொடர்ந்து, எம்.கே. பைஜி நிரு பர்களிடம் கூறுகையில், பா. ஜனதா கட்சி மக்களின் முன்பாக மிகப்பெரிய தோல்வி கண்ட அரசாக தற்போது இருக்கிறது. நீட் வினாத்தாள் கசிவு உள்பட அனைத்துதுறைகளிலும் தோல்வியை கண்டுள்ளது. இந்து சமுதாய மக்களே பா.ஜனதாவால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதுதான் உண்மையாக இருக்கிறது.

டெல்லியில் இளைஞர்கள் போராட்டத்தால் தர்மேந்திர பிரதான் பதவி விலகியது இந்த ஆட்சியின் முதல் விக்கெட். 2029ம் ஆண்டு தேர்தலில் பா.ஜனதாவின் அனைத்து விக்கெட்டும் விழும். முதல் அமைச்சர் விஜய்யின் திரைப்படத்தை கேரளாவில் அனைவரும் ரசித்து பார்ப்பார்கள். ஆனால், அவரது அரசியல் அங்கு எடுபடாது. கேரள மக்கள் சினிமாவையும், அரசியலையும் பிரித்து பார்க்க தெரிந்தவர்கள்" என்றார்.

கூட்டத்தில், காவிரி நீர் உரிமை மற்றும் விவசாயிகள் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அனைத்து கட்சி கூட்டத்தை தமிழக அரசு கூட்ட வேண்டும், தென் மாநிலங்களில் உரிமைகளை பறிக்கும் தொகுதி மறுவரையறை மசோதாவை அனைத்து கட்சிகளும் முறியடிக்கவேண்டும். மதுரைஎய்ம்ஸ் மருத்துவமனை பணிகளைவிரைந்து முடிக்கவேண்டும். சிறுபான்மையினருக்கான தனி பட்ஜெட்டை தமிழக அரசு வெளியிட வேண்டும் உள்பட 7 தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன

## கோதையாற்றில் முதலை நடமாட்டம்: வனத்துறையினர் கண்காணிப்பு



குமரி, ஆக. 11

கோதையாற்றில் கடையாலுமூடு, களியல் பகுதிகளில் கடந்த 6 மாதங்களாக முதலை நடமாட்டம் இருந்து வருகிறது. இதனை பலர் செல்போன் களில் படம்பிடித்து சமூகவலைத்தளங்களில் பதிவிட்டனர். மேலும், முதலையை பிடித்து அகற்றிட வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து அதனை பிடிக்க வனத்துறையினர் பல்வேறு கட்ட முயற்சிகளை மேற்கொண்டனர். அதன் ஒருபகுதியாக ஆற்றில் முதலை காணப்பட்ட உறைகிணற்றின் அருகில் மிதவை கூண்டு வைத்தனர். ஆனாலும் முதலை அதில் சிக்கவில்லை. அந்த முதலையானது சில நாட்கள் தென்படுவதும், பின்னர் மாயமாவதுமாக இருந்து வருகிறது.

ஒவ்வொரு முறையும் வெவ்வேறு இடங்களில் தென்படுகிறது. மேலும், ஆற்றுப்பகுதியில் பல கி.மீ தூரம் மிக நீண்ட பகுதியாகவும், கரையோரங்களில் செடிகள் மற்றும் புதர்கள் மண்டிக்கிடப்பதால் அந்த வழியாக வனத்துறையினர் நடந்து சென்று முதலையை கண்காணிப்பது எளிதான செயலாக இல்லை. இந்தநிலையில் முதலை குறித்த அச்சம் மக்கள் மத்தியில் இருந்து வருவதால், அதனை பிடித்து அகற்ற வேண்டியது கட்டாயமாகியுள்ளது. இதனால் வனத்துறை மற்றும் முதலை ஆராய்ச்சியாளர்கள் அடங்கிய வல்லுனர் குழு களத்தில் இறங்கியுள்ளது. இந்த குழு கடந்த 2 நாட்களுக்கு மேலாக ஆற்றுப்பகுதியில் படகிலும், நடந்து சென்றும் முதலையின் நடமாட்டத்தை கண்காணித்து அதனை தேடி வருகின்றனர். அதன்படி நேற்றும் இந்த குழுவினர் ஆற்றில் படகில் சென்றவாறு முதலையை தேடினர். இந்தநிலையில் முதலையை பிடிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து களியல் வனச்சரக அலுவலர் யோகஸ்வரன் கூறுகையில், முதலையை பிடித்து அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் வனத்துறை தீவிரமாக உள்ளது. தற்போது ஆற்றுப்பகுதி முழுவதும் கண்காணிப்பு மற்றும் தேடுதல் பணியை தீவிரப்படுத்தி வருகிறோம். மழை காரணமாக தற்போது ஆற்றில் தண்ணீர் அதிகமாக பாய்கிறது. வனத்துறையினர் நடவடிக்கைக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு தரவேண்டும். குறிப்பாக ஆற்றின் கரையோரம் உள்ள படித்துறைகளில் மக்கள் குளிப்பதையும், தூண்டில் போட்டு மீன்பிடிப்பதையும் தவிர்த்தால் முதலையின் நடமாட்டத்தை உடனுக்குடன் கண்காணித்து அதனை பிடிக்க முடியும். என்றார்.

## சென்னை காசிமேட்டில் மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்



சென்னை, ஆக 11

சென்னை காசிமேடு பகுதியை சேர்ந்த விசைபடகு உரிமையாளர்கள் கணேசன் மற்றும் கர்ணன் என்பவருக்கு சொந்தமான 2 விசைபடகுகளில், மீன்பிடி தடை காலம் நிறைவு பெற்ற கடந்த 15ம் தேதி 19 மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்றனர். காசிமேட்டில் இருந்து மீன் பிடிக்கசென்றஇவர்களை, ஆந்திரகடல்சார் (மரைன்) போலீசார் சிறைபிடித்துள்ளனர். மேலும் அவர்கள் சென்ற இரண்டு விசைப்படகுகளையும் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்டுத் தரக்கோரி மீனவர்கள் காசிமேட்டிலும், சென்னைமீன்வளத்துறை அலுவலகத்திலும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். மேலும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதால், ஆந்திர அரசால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள விசைப்படகுகளை மீட்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

இந்த நிலையில், ஆந்திராவில் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், படகுகளையும் மீட்கக் கோரி சென்னை காசிமேட்டில் மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய 3 மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் இன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுதால் ரூ.10 கோடி வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

## திருவொற்றியூர் போலீஸ் நிலையத்தில் தீக்குளித்த முதியவர் உயிரிழப்பு

திருவொற்றியூர், ஆக. 11



சென்னை திருவொற்றியூர் போலீஸ் நிலையத்தில் தீக்குளித்த முதியவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். சென்னை திருவொற்றியூர், காலடிப்பேட்டையை சேர்ந்தவர் குமார் (வயது 67). இவருக்கு உஷா, பாரதி, மாரி ஆகிய 3 மனைவிகளும், 5 பிள்ளைகளும் உள்ளனர். ஆனாலும் இவர்கள்யாரும்தனக்கு உணவு, தண்ணீர் கொடுத்து கவனிக்காமல் வீட்டை விட்டு விரட்டி விட்டதாக நேற்று முன்தினம் மதியம் திருவொற்றியூர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். பின்னர் திடீரென போலீஸ் நிலைய வளாகத்தில் அவர் தயாராக வைத்திருந்த பெட்ரோலை உடலில் ஊற்றி தீக்குளித்தார். அதிர்ச்சி அடைந்த போலீசார், அவரது உடலில் எரிந்த தீயை அணைத்து, அவரை சிகிச்சைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்குஅனுப்பிவைத்தனர். பின்னர்மேல் சிகிச்சைக்காக கீழ்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி குமார் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## கொடைக்கானலில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் நீலக்குறிஞ்சி மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன



கொடைக்கானல், ஆக. 12

மலைகளின் இளவரசியான கொடைக்கானல் மற்றும் அதன்சுற்றுவட்டாரப்பகுதிகளில், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கக்கூடிய உலகப் புகழ்பெற்ற அரிய வகை தாவரமான நீலக்குறிஞ்சி மலர்கள் தற்போது ஆங்காங்கே பூக்கத் தொடங்கியுள்ளன. திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலைப்பகுதிகளில் பசுமையான புல்வெளிகளும், எழில் கொஞ்சும் பள்ளத்தாக்குகளும் நிறைந்து காணப்படுகின்றன.

இங்குள்ள பல்வேறு வனப்பகுதிகளிலும், மலைச் சரிவுகளிலும் இயற்கை எழிலோடு வளர்ந்துள்ள குறிஞ்சி செடிகளில் தற்போது நீலக்குறிஞ்சி மலர்கள் கொத்து கொத்தாக பூத்துக் குலுங்குகின்றன.

சுமார் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும் இந்த அரிய வகை மலர்கள், தற்போது மலை பிரதேசங்களை நீல நிற பாயாக மாற்றி, காண்போரை கண் கவர செய்யும் வகையில் இயற்கை அன்னைக்கு அழகூட்டி வருகின்றன.

கொடைக்கானல் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இந்த நீலக்குறிஞ்சி மலர்கள் பூத்துக் குலுங்குவதை காண, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில்

இருந்தும், அண்டை மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் கொடைக்கானலில் குவிந்துவருகின்றனர்.மலையெங்கும்நீலப்போர்வை போர்த்தியது போலக் காட்சியளிக்கும் இந்த அற்புத இயற்கை நிகழ்வை, சுற்றுலாப் பயணிகள் தங்களது குடும்பத்தினருடன் கண்டு ரசித்து, செல்பி மற்றும் புகைப்படங்கள் எடுத்து மகிழ்ந்து வருகின்றனர். இதனால் கொடைக்கானலின் முக்கியப் சுற்றுலா தலங்கள் அனைத்தும் தற்போது பயணிகளின் கூட்டத்தால்களைகட்ட தொடங்கியுள்ளன.

## மழை வேண்டி கழுதைகளுக்கு கல்யாணம் வேலூரில் வினோத நிகழ்வு

வேலூர், ஆக. 12




வேலூர் மாவட்டம் ஒடுகத்தூர் சுற்றுவட்டார பகுதிகளில் வறட்சி மற்றும் தண்ணீர் பற்றாக்குறை நிலவி வருவதால், அப்பகுதி மக்களின் பாரம்பரிய நம்பிக்கையின்படி, மழை வேண்டி ஆண் மற்றும் பெண் கழுதைகளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது. இதற்காக இரு கழுதைகளுக்கும் மணமகன், மணமகள் அலங்காரம் செய்யப்பட்டு, மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டன.

தொடர்ந்துகோவிலில்சிறப்புபூஜைகள்நடத்தப்பட்டு, யாகம் வளர்த்து, மந்திரங்கள் முழங்க பொதுமக்கள் முன்னிலையில் கழுதைகளுக்கு திருமணம் நடைபெற்றது. இந்த திருமணத்தில் ஏராளமான பொதுமக்கள்கலந்து கொண்டனர். இந்தநிகழ்ச்சியில் பங்கேற்றால்திருமணம் ஆகாதவர்களுக்குதிருமணம் கைகூடும் என்ற நம்பிக்கை உள்ளதால் ஏராளமான இளம் பெண்கள் மற்றும் ஆண்கள் இதில் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியின்முடிவில்பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## மனைவிக்கு பயந்து மண்ணில் புதைத்து வைத்த ரூ.5 லட்சம் பணத்தை அரித்த கரையான்; விவசாயி கண்ணீர்



ஜெய்ப்பூர், ஆக. 11

ராஜஸ்தானில் மனைவிக்கு தெரியாமல் நிலத்தில் புதைத்து வைத்த ரூ.5 லட்சம் பணத்தையும் கரையான் அரித்ததால் விவசாயி கண்ணீர் வடித்துள்ளார்.

**குழி தோண்டி மண்ணில் புதைப்பு**

ராஜஸ்தான் மாநிலம் பலோத்ரா மாவட்டத்தில் உள்ள பச்பத்ராபகுதியைச்சேர்ந்தவிவசாயியானமங்கிலால் மேக்வால், கடந்தாண்டு ரூ.5 லட்சத்திற்கு தனது நிலத்தை விற்றுள்ளார். அந்தப் பணத்தை வைத்து விவசாயி நிலத்தில் ஒரு அறை கட்டுவதற்கு திட்டமிட்ட அவர், மனைவிக்கு தெரியாமல், பணத்தை பாலிதின் கவரில் போட்டு குழி தோண்டி மண்ணில் புதைத்து வைத்துள்ளார்.மங்கிலாலுக்கு குடிப்பழக்கம் இருந்ததால், பணத்தை புதைத்து வைத்த இடத்தை அவர் மறந்து விட்டார் என்று கூறப்படுகிறது. திடீரென அறை கட்டுவதற்கு பணம் தேவைப்பட்ட நிலையில், மண்ணில் புதைத்து வைத்த பணத்தை தனது விவசாய நிலத்தில் நீண்ட நாட்களாக தேடிப் பார்த்து வந்துள்ளார். அப்படி அவர் சுமார் 6 ஏக்கர் நிலத்தை தோண்டி பார்த்தும் பணம் கிடைக்கவில்லை.

**பணத்தை அரித்த கரையான்**

நாளடைவில் இந்த விஷயத்தை தனது மனைவி மற்றும் மகனிடம் அவர் தெரிவித்துள்ளார். ஆரம்பத்தில் இதனை நம்பாத அவர்கள், பிறகு மங்கிலாலுடன் சேர்ந்து பணத்தை தேடும் பணியில் ஈடுபட்டனர். இப்படியே ஓராண்டை கடந்து விட்ட நிலையில், மழை பெய்ததால் நிலத்தை விவசாயத்திற்கு ஆயத்தப்படுத்தும் விதமாக, டிராக்டரை வைத்து உழுதுள்ளனர்.அப்போது, புதைத்துவைத்திருந்தரூபாய்நோட்டுகள்அவர்களின் கண்களில் பட்டுள்ளது. அதில் இருந்த 5 லட்சம் மதிப்பிலான 500 ரூபாய் நோட்டுகளை கறையான் அரித்த நிலையில் இருப்பதைக் கண்டு குடும்பமே அதிர்ந்து போகினர். இதையடுத்து, கறையான் அரித்த ரூபாய் நோட்டுகளை பச்பத்ராவில் உள்ள வங்கியில் மாற்றுவதற்காக எடுத்துச் சென்றுள்ளனர்.ஆனால், அந்த ரூபாய் நோட்டுகளை மாற்றித்தர மறுத்த வங்கி நிர்வாகம், ஜெய்ப்பூரில் இருக்கும் தலைமை அலுவலகத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தினர். இதனிடையே,கறையான்அரித்தரூபாய்நோட்டுகளை பார்த்து மங்கிலால் கண்ணீர்விட்டு அழும் வீடியோ சமூகவலைதளங்களில் வைரலாகி, பார்ப்போரின் நெஞ்சை உலுக்குகிறது.

## மதுரையில் மதுப்பிரியர்களின் புகலிடமாக மாறிய மயானத்தை மீட்டெடுத்த ‘வீ தி லீடர்ஸ்’ தன்னார்வலர்கள்

மதுரை, ஆக. 11



மதுரையில் மதுப்பிரியர்களின் புகலிடமாக மாறிய மயானத்தை ‘வீ தி லீடர்ஸ்’ அமைப்பின் தன்னார்வாலர்கள் மீட்டெடுத்தனர்.மதுப்பிரியர்கள் கூடாரம் மதுரை மாவட்டம் பாப்பாக்குடி பகுதியில் அமைந்துள்ள பொது மயான வளாகம், கடந்த சில மாதங்களாகப் பராமரிப்பின்றி புதர்கள் மண்டி வந்தன. இதனால், சமூக விரோதிகள் மற்றும் மதுப்பிரியர்களின் கூடாரமாக அப்பகுதி மாறி, பொதுமக்கள்பயன்படுத்த முடியாதஅவலநிலையில் இருந்தது.

**சுற்றுச்சூழல் மாத விழிப்புணர்வுப் பணி**

இந்நிலையில், சுற்றுச்சூழல் மாதத்தை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் ‘சுத்தமான, வளமான தமிழகம்’ இயக்கத்தின் கீழ் பல்வேறு தூய்மைப் பணிகளை ‘வீ தி லீடர்ஸ்’அமைப்பு முன்னெடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, பாப்பாக்குடி மயானத்தை முற்றிலும் தூய்மைப்படுத்தஅந்தஅமைப்பினர்திட்டமிட்டனர்.

**அகற்றப்பட்ட டன் கணக்கிலான குப்பைகள்**

இதையடுத்து இன்று (திங்கட்கிழமை) நடைபெற்ற இந்ததூய்மைப்பணிக்கு, கே.கே. பில்டர்ஸ்கண்ணன் தலைமை தாங்கி, முன்னிலை வகித்தார். இதில் திரளான அந்த அமைப்பின் தன்னார்வலர்கள் மற்றும் இளைஞர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.மயான வளாகத்தில் பல வருடங்களாகக் கிடந்த நூற்றுக்கணக்கான மது பாட்டில்கள் நெகிழி (பிளாஸ்டிக்) குப்பைகள், கழிவுகள், அடர்ந்து வளர்ந்திருந்த சீமைக் கருவேல மரங்கள் மற்றும் புதர்கள் ஆகியவை நவீன உபகரணங்கள் மற்றும் அவர்களால் முழுமையாக அகற்றப்பட்டு, வளாகம் சுத்தப்படுத்தப்பட்டது.

**பொதுமக்கள் பாராட்டு**

மயானங்கள்போன்றபொதுஇடங்கள்சுகாதாரமற்றுப் போவதைத்தடுத்து,அவற்றைஅமைதியானசூழலாக மாற்றும் நோக்கில் ‘வீ தி லீடர்ஸ்’ அமைப்பு மேற்கொண்டு வரும் இந்த தூய்மைப் பணி, மதுரை பகுதி மக்களிடையே நெகிழ்ச்சியையும், சமூக வலைத்தளங்களில் பரவலான பாராட்டுகளையும் பெற்று வருகிறது.மேலும் படிக்க

## சேலத்தில் களை கட்டிய வண்டி வேடிக்கை... கடவுள் வேடம் அணிந்து வந்த பக்தர்களால் பரவசம்

சேலம், ஆக. 11



சேலம் செவ்வாய்பேட்டை மாரியம்மன் கோவிலில் ஆடித்திருவிழா கடந்த 21ந் தேதி பூச்சாட்டுதலுடன் தொடங்கியது. தொடர்ந்து கம்பம் நடுதல், கொடியேற்றம், அலகு குத்துதல், சக்தி அழைப்பு, பொங்கல் வைத்தல், தேரோட்டம் நடை பெற்றது. விழாவின் சிகர நிகழ்ச்சியான வண்டி வேடிக்கை நேற்றுஇரவுநடந்தது.இதில்,வண்ணமின்விளக்குகள் மற்றும் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில் பக்தர்கள் கடவுள் வேடம் அணிந்து ஊர்வலமாக வந்தனர். செவ்வாய்பேட்டை வைஸ்ய நண்பர்கள் குழு சார்பில் கேரள மாநிலம் கொல்லூர் மூகாம்பிகை உருவான வரலாறு கதையை விளக்கும் வகையில் பக்தர்கள் ஆதி சங்கரன், மூகாம்பிகை, சொர்ணாம்பிகை, லட் சுமி, சரஸ்வதி, பராசக்தி, முனிவர் மற்றும் அரக்கன் ஆகியோர் வேடங்களை தத்ரூபமாக அணிந்து வண்டியில் ஊர்வலமாக வந்தனர். இது பொதுமக்களை வெகுவாக கவர்ந்தது. இதேபோல், மற்றொரு வண்டியில் அமர்நாத் பனிலிங்கத்தில் சிவன், பார்வதி, விநாயகர், சந்திரன் ஆகிய கடவுள் வேடங்க ளையும், அப்புசெட்டி தெரு நண்பர்கள் குழு சார்பில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் என நால்வர் போன்று பக்தர்கள் வேடம் அணிந்து மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக வந்தனர்.

குறிப்பாக புராண கதைகளில் வரும் கடவுள்களை போன்று பக்தர்கள் வேடமாக அணிந்து வந்தனர். இதுதவிர, மதுரை வீரன், எல்லையை காக்கும் கருப்பசாமி போன்றும் பக்தர்கள் வேடம் அணிந்து அதற்கு ஏற்ற பாடலுக்கு ஆக்ரோஷமாக ஆடியவாறு வந்தனர். இதனை தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட மற்றொரு வண்டியில் கைலாய மலையை தூக்க முயன்று தோல்வி அடைந்த ராவணின் வரலாறு நாடகத்தை அதற்கு ஏற்ற கதாபாத்திரத்தில் பக்தர்கள் வேடம் அணிந்து மிகவும் தத்ரூபமாக பொதுமக்கள் மத்தியில் நடித்து காட்டியது அனைவரையும் வெகுவாக கவர்ந்தது. இதேபோல், செவ்வாய்பேட்டையில் வசிக்கும் ராஜஸ்தான் வியாபாரிகள் சார்பில் பாபா ராம்தேவ் வேடமணிந்து வண்டியில் ஊர்வலமாக வந்தனர். ஒவ்வொரு அலங்கார வண்டி முன்பும் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள்,சிறுமிகள்மேளதாளத்திற்குஏற்பஆட்டம், பாட்டத் துடன் ஊர்வலமாக வந்தனர். மேலும், குழந்தைகளை உற்சாகப்படுத்தும் வகையில் சிலர் முயல், கரடி, சிங்கம் போன்ற கார்ட்டூன் பொம்மை வேடம் அணிந்து ஆடியவாறு வந்தனர். இந்த கார்ட்டூன் முன்பு சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை செல்போனில் செல்பி எடுத்து மகிழ்ந்தனர். அலங்கரிக்கப்பட்ட அனைத்து வண்டிகளும் வண்டிப்பேட்டை பகுதியில் இருந்து செவ்வாய்பேட்டை மெயின்ரோடு வழியாக தேர் நிலையம் வந்து தீயணைப்பு நிலையம் வழியாக ஊர்வலமாக சென்றது.இந்த வண்டி வேடிக்கை நிகழ்ச்சியை காண செவ்வாய்பேட்டை, அன்னதானப்பட்டி, சூரமங்கலம், குகை, நெத்தி மேடு, டவுன் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வந்திருந்தனர். இதனால் செவ்வாய்பேட்டை மெயின்ரோட்டில எங்கு பார்த்தாலும் பொது மக்கள் கூட்டம் அலைமோதியது.இதையொட்டி500க்கும்மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். முடிவில், சிறப்பாக அலங்கரித்து ஊர்வலமாக வந்த வண்டிகளுக்கு கோவில் விழாக்குழு சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டன.

## நாங்கள் தினம் தினம் டென்ஷனாக இருக்கிறோம்... அமைச்சர் ஆனந்த்

சென்னை, ஆக. 11



தமிழக சட்டசபையில் முதல்அமைச்சர் விஜய் தலைமையில் பட்ஜெட் மீதான விவாத கூட்டம் நடந்து வருகிறது. இந்தநிலையில், 2 நாள் விடுமுறை முடிந்து தமிழக சட்டசபை காலை 9.30 மணிக்கு கூடியது. முதலில் இரங்கல் குறிப்புவாசிக்கப்பட்டது. தொடர்ந்து பட்ஜெட்

பொது விவாதத்தின் போது "நீங்கள் எல்லாம் ரிலாக்ஸாக இருக்கிறீர்கள்; நாங்கள் அனைவரும் டென்ஷனாக இருக்கிறோம் என்று சட்டமன்றத்தில் திமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேசினார். இதற்கு நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த் பதில் அளித்து கூறுகையில்,தினம் “சின்ன வாய்க்கால் பிரச்சினைதான்... இன்று காலையில்கூட போன்செய்து சரியாகிவிட்டாதா என்று கேட்கக்கூடிய முதல்அமைச்சர்தான் இருக்கிறார்; நீங்களாவது. 5 வருஷம் டென்ஷனாக இருந்தீங்க. நாங்கள் தினம் தினம் டென்ஷனாக இருக்கிறோம்; சின்ன விஷயமாக இருந்தாலும் எங்களுக்கு அப்படியொரு பயம் இருக்கிறது. என்று அவர் கூறினார்.தொடர்ந்து எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கூறுகையில், “அமைச்சர் புஸ்ஸி ஆனந்த்எப்போதும்பிசிஆனந்தாகவலம்வருகிறார்... அனைத்து கட்சித் தொண்டர்களும் அவரை பார்த்து வருகின்றனர்; புதிதாக வந்த இயக்கம்.. இனிமேல் தான் உங்களுக்கு தெரியபோகிறது. பேசுவது எளிது; அதை செயல்படுத்தும்போது தான் கஷ்டங்கள் தெரியும்” என்று பேசினார். இதனால் அவையில் சிறிது நேரம் கலகலப்பு ஏற்பட்டது

## தமிழ்த்தாய் தனித்தீர்மானம் மீதான விவாதம்; அமைச்சர் வன்னி அரசு பேச்சால் அவையில் சலசலப்பு

சென்னை, ஆக. 11




தமிழககவர்னர்பங்கேற்கும்நிகழ்வுகளில்தமிழ்த்தாய் வாழ்த்து பாடலுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படுவதில்லை என தொடர்ச்சியாக சர்ச்சை எழுந்து வருகிறது. குறிப்பாக தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தவெக ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு, தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் பின்னுக்கு தள்ளப்பட்டு வருவதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன.முதல்அமைச்சராகவிஜய்பதவியேற்கும் நிகழ்ச்சியின் தொடக்கத்தில் வந்தே மாதரம் பாடப்பட்டு தமிழ்த்தாய் வாழ்த்து 3வது இடத்துக்கு தள்ளப்பட்டது. இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. அதனை தொடர்ந்து, அமைச்சரவை விரிவாக்கத்திற்கான பதவியேற்பு விழாவில் கூட அதே போல் பாடப்பட்டது.கவர்னர் சமீபத்தில், தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை எழுதிய மனோன்மனியம் சுந்தரனார் பெயர் கொண்ட பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவதாக பாடப்பட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. முன்னதாக இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை என்றால் தன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கவர்னர் மாளிகை உத்தரவிட்டிருந்ததாகபல்கலைக்கழகதுணைவேந்தர் சந்திரசேகர் தெரிவித்திருந்தார்.தமிழ்த்தாய் வாழ்த்து

ந்நிலையில் அனைத்து நிகழ்ச்சிகளிலும் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாட வேண்டும் என தனித் தீர்மானத்தை சட்டமன்றத்தில் முதல்வர் விஜய் இன்று கொண்டு வந்துள்ளார். கல்வி நிறுவனம், அரசு அலுவலகம் என அனைத்து பொதுத்துறை நிறுவனம் நிறுவனங்களிலும் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயமாகபாடவேண்டும்என்றதனித்தீர்மானத்தை முதல் அமைச்சர் விஜய் கொண்டு வந்து உரையாற்றினார். இந்த தீர்மானம் மீது அனைத்து கட்சி எம்.எல்.ஏக்களும் பேசினர். பின்னர் குரல் வாக்கெடுப்பு மூலமாக இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**அவையில் சலசலப்பு**

முன்னதாக இந்த தீர்மானம் மீது பேசிய அமைச்சர் வன்னி அரசு கூறிய கருத்தால் அவையில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. வன்னி அரசு கூறும் போது, தமிழ்த்தாய் வாழ்த்து தொடர்பாக முதலமைச்சர் கொண்டு வந்த தனி தீர்மானத்திற்கு ஆளும் கட்சி வரிசையில் தான் கைத்தட்டி வரவேற்றார்கள்; எல்லோரும்வரவேற்கவேண்டும்;இதுஒருவரலாற்று சிறப்புமிக்கமுக்கியமானதீர்மானம்”என்றார்.இதற்கு எதிர்க்கட்சிஎம்.எல்.ஏக்கள்ஆட்சேபம்தெரிவித்தனர். இதனால் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. இதையடுத்து பேசிய வன்னி அரசு எல்லோரும் வரவேற்றால் மகிழ்ச்சி..நான் குறையாக சொல்லவில்லை என்றார். மேலும் படிக்க

## கடலூர் அருகே பயங்கரம்: நாட்டு வெடிகுண்டு வீசி கார் டிரைவர் கொடூரக் கொலை

கடலூர், ஆக. 11

கடலூர் அருகே பெரிய காட்டுப்பாளையம் பகுதியை சேர்ந்தவர் சசிக்குமார் (வயது 31). இவர் கார் டிரைவராகபணிபுரிந்துவருகிறார்.

**வெட்டிக்கொலை**

இவர் இன்று கடலூர் ரங்காரெட்டிப்பாளையம் அருகே கார் ஓட்டி வந்தார். புதுச்சேரி எல்லை அருகே உள்ள இரட்டைசாவடி அருகே தனது காரை நிறுத்தி சுத்தம் செய்து கொண்டிருந்தார். அப்போது அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் சசிக்குமார் மீது நாட்டு வெடிகுண்டை வீசினர். இதனை தொடர்ந்து அந்த மர்ம நபர்கள் அவரை கொடூரமாக வெட்டிக் கொலை செய்துவிட்டு, தப்பி ஓடினர். இதில் பலத்த காயமடைந்த சசிக்குமார் ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் சசிகுமாரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துமவனைக்கு அனுப்பி வைத்தனர்.

**போலீசார் வலைவீச்சு**

இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் சசிகுமாரை கொலை செய்துவிட்டு தப்பி ஓடிய மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர். இதனிடையே அவர் கொலை செய்யப்பட்ட காரணம் குறித்தும் புதுச்சேரி மற்றும் கடலூர் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# 'தமிழ்த்தாய் வாழ்த்து ' பாடலுக்கு விளக்கம் கொடுத்த அமைச்சர்

சென்னை, ஆக. 11

தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடர் கூட்டத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து தொடர்பாக அரசினர் தனித் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதனை ஆதரித்து பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் பேசியதாவது;"உலகில் உள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குதாய்மொழியில்பெயர்வைப்பார்கள். ஆனால் தாய் மொழியையே பெயராக வைக்கக்கூடிய கூட்டம் இந்த தமிழ் கூட்டம். தமிழரசன், தமிழழகன், தமிழழகி என மொழியின் பெயரையே தங்கள் பிள்ளைகளுக்கு வைத்து அழகுப் பார்க்கக்கூடிய கூட்டம் நம் தமிழ்க்கூட்டம். இந்த கூட்டம் தமிழ் தாயை வாழ்த்தும் பாடல் தான் தமிழ்த்தாய் வாழ்த்து.

தமிழ்த்தாய் வாழ்த்து

ஆனால் இது தமிழ்த்தாய்க்கான வாழ்த்து மட்டுமல்ல. இந்த பூமித்தாயை வாழ்த்தும் வாழ்த்து. இந்த நிலம், நிலத்தை சுற்றி கடல், அந்த நீல நிற கடலை புடவையாகசுற்றியிருக்கிறாளாம்பூமித்தாய். 'நீராரும் கடலுடுத்த நிலமடந்தை'. அந்த பூமித்தாய்க்கு ஒரு அழகான முகம். 'சீராரும் வதனமென' வதனம் என்றால் முகம். அந்த சீராரும் வதனம் எதுவென்று பார்த்தால் அது 'திகழ்பரத கண்டமெனில்' இந்த பூமித்தாயின் முகம் பாரதத்தாய், அவளுக்கு சிறு பிறை போன்ற நெற்றி, அது தென்னிந்தியா, அந்த நெற்றிக்கு அழகு அதில் வைக்கிற ஒரு பொட்டு. அது தமிழ்நாடு என்கிற தாய். அந்த பொட்டு நெற்றிக்கு மட்டுமா வாசம் தருகிறது. எட்டுத் திக்கும் மணமாக வீசுகிறது. அப்படி எட்டுத்திக்கும் புகழோடு இருப்பவள்தமிழ்த் தாய். இத்தனை காலங்கள் இருந்தால் தாய்க்கு



வயதாகும் தானே.உலகத் தாய் வாழ்த்து

ஆனால் இத்தனாயிரம் ஆண்டுகள் வளர்ந்த பின்னும் நீ எப்படி இன்னும் இளமையாக இருக்கிறாய்! உன் இளமையை வாழ்த்துகிறேன் என்று, தமிழை, தமிழ்நாட்டைவாழ்த்தி, தென்னிந்தியாவைசொல்லி, பாரத்தாயை வாழ்த்தி, உலகத் தாயையே வாழ்த்தும் இந்த தமிழ்த்தாய் வாழ்த்தை உலகத் தாய் வாழ்த்து என்று சொல்வதில் பெருமிதம் கொள்கிறேன். இருகரம் கூப்பி வணங்கி வாழ்த்துகிறேன்.இனி பொது நிகழ்ச்சிகளில், கல்வி நிலையங்களில், எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் தமிழ்த்தாய் வாழ்த்து மட்டுமே முதலில் ஒலிக்கும். அதற்காக தீர்மானம் நிறைவேற்றியவர் என்ற சரித்திரத்தில் முதல்வரின் பெயரே நிலைக்கும். அவரை வாழ்த்தி இந்த தீர்மானத்தை வரவேற்கிறேன்."இவ்வாறு அவர் பேசினார்.

# கூடுவாஞ்சேரியில் 2 சிறுவர்களை கடித்த குரங்கு கூண்டு வைத்து பிடிக்க வனத்துறை நடவடிக்கை

வண்டலூர், ஆக. 11

கூடுவாஞ்சேரியில் 2 சிறுவர்களை கடித்த குரங்கை கூண்டு வைத்து பிடிக்க வனத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.சிறுவர்களை கடித்த குரங்கு

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம்கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு உட்பட்ட காந்திநகர் 2வது தெருவில், நேற்று காலை வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த 2 சிறுவர்களை அப்பகுதியில் சுற்றித்திரிந்த குரங்கு திடீரென கடித்துக் குதறியது. இதில் சிறுவர்கள் காயம் அடைந்தனர். இதையடுத்து, சிறுவர்களை அவர்களது பெற்றோர், அருகில் உள்ள தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகஅனுமதித்தனர்.வனத்துறைக்குதகவல் இதுகுறித்து அப்பகுதி நகராட்சி கவுன்சிலர் கவுசல்யா பிரகாஷ், வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார். அதன்பேரில் வனத்துறை அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். குரங்கை பிடிப்பதற்காக அப்பகுதியில் கூண்டு வைக்கப்பட்டு, அதற்குள் வாழைப்பழத்தை வைத்து குரங்கை பிடிக்க வனத்துறை ஊழியர்கள் முயற்சி மேற்கொண்டனர். அந்த குரங்கு அங்கிருந்து திடீரென மாயமானது. தொடர்ந்து குரங்கை பிடிக்க அப்பகுதியில் கூண்டு வைக்கப்பட்டுள்ளது.தொடர்ந்து அட்டகாசம்

கடந்த சில தினங்களுக்கு முன்பு நந்திவரம் பகுதியில் உள்ள புதுப்பாளையத்தம்மன் கோவிலுக்கு சாமி கும்பிட வந்த 5 பக்தர்களை குரங்கு கடித்துக்குதறியது. கடந்த 20 நாட்களுக்கு முன்பு நந்திவரம் அங்கன்வாடி மையம் அருகே தெருவில் தண்ணீர் பிடித்துக்



கொண்டிருந்த பெண்கள் மற்றும் தெருவில் விளையாடி கொண்டிருந்த சிறுவர்களை குரங்கு கடித்தது.இந்த நிலையில், மீண்டும் நந்திவரம் கூடுவாஞ்சேரி பகுதிகளில் குரங்குகள் சுற்றித்திரிந்து குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெரியவர்களை கடித்துஅட்டகாசம்செய்துவருவதுகுறிப்பிடத்தக்கது.

பொதுமக்களுக்கு வேண்டுகோள்

இதுகுறித்துவனத்துறைஅதிகாரிஒருவர்கூறும்போது, "தெருக்களில் சுற்றித்திரியும் குரங்குகளுக்கு பொதுமக்கள் உணவு மற்றும் தின்பண்டங்களை வழங்கக்கூடாது. குரங்குகளுக்கு தொடர்ந்து உணவு வழங்கினால், அந்தப் பகுதியில் உணவு கிடைக்கும் என்ற எண்ணத்தில் அவை மீண்டும் மீண்டும் அங்கு வரத் தொடங்கும். ஒரு கட்டத்தில் உணவு கிடைக்காதபோது, பொதுமக்களை அச்சுறுத்துவதுடன், கடிக்கவும் தொடங்குகின்றன. எனவே, குரங்குகளுக்கு உணவு வழங்குவதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும்" என்று கூறினார்

# ஒசூரில் பரபரப்பு சம்பவம்; பயணிக்கு உயிர் பயம் காட்டிய பஸ் டிரைவர்

ஒசூர், ஆக. 11

ஒசூரில் இருந்து பாகலூர் வழியாக பேரிகைக்கு டவுன் பஸ் சென்றது.இதனை டிரைவர் ரமேஷ் ஓட்டிச்சென்றார். இதில் பயணித்த பயணி ஒருவர், பாகலூர் அருகே அச்சந்திரம் என்ற கிராமத்தில் இறங்க வேண்டிய நிலையில், டிரைவர் அங்கு நிறுத்தாமல் அதனை கடந்து தும்மனப்பள்ளி என்ற கிராமத்தில் பஸ்சை நிறுத்தி அந்த பயணியை இறக்கி விட்ட தாக கூறப்படுகிறது.இதனால் ஆத்திரமடைந்த பயணி, பஸ்சின் முன்புறமாக சென்று டிரைவரிடம் வாக்குவாதம் செய்துள்ளார். ஆனால், அதனை பொருட்படுத்தாத அந்த டிரைவர், பஸ்சின் முன்புறத்தில் அந்த பயணி நிற்பதை கூட கண்டுகொள்ளாமல் பஸ்சை இயக்கினார்.வீடியோ வைரல்

இதனால் அதிர்ச்சியும், அச்சமும் அடைந்த அந்த பயணி உயிரை காப்பாற்றி கொள்ள பஸ் சின் முன்பக்க கண்ணாடிக்கு கீழே கைகளால் இறுகப்பிடித்து



தொங்கியவாறே சென்றார். ஆனாலும் டிரைவர் பஸ்சை நிறுத்தாமல் இயக்கினார். இதனால் திடீர் பரபரப்பு ஏற்பட்டது. சுமார் 1 கிலோ மீட்டர் தூரம் சென்ற உடன் டிரைவர் பஸ்சை நிறுத்தியதாக தெரிகிறது.இந்த காட்சி சமூக வலைதளங்களில் வைரலானது. இதையடுத்து பஸ் டிரைவர் ரமேஷ் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவரை பணி இடைநீக்கம்செய்துபோக்குவரத்துதுறைஅதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த சம்பவம் ஒசூரில் பரபரப்பை ஏற்படுத்தியது

# குன்னூர் மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் காட்டு யானை உலா

நீலகிரி, ஆக. 11

நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதியில் பலாப்பழ சீசன் நிலவுகிறது. இதனால் பலாப்பழங்களை ருசிப்பதற்கு சமவெளி பகுதிகளில் இருந்து காட்டு யானைகள் குன்னூர்மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் முகாமிட்டு உள்ளன. இந்தநிலையில் குன்னூர் மரப்பாலம், பர்லியார் பகுதிகளில் சாலை நடுவே காட்டு யானை ஒன்று உலா வந்தது. அதோடு வாகனங்களை வழிமறித்தது. இதனால் வாகன ஓட்டிகள் அச்சமடைந்தனர். தகவல் அறிந்த வனத்துறையினர் அந்த பகுதிக்கு விரைந்து சென்று காட்டு யானையை விரட்டும் பணியில் ஈடுபட்டனர். குன்னூர் வனச்சரகர் வீரமணி தலைமையில் வனத்துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் மலைப்பாதையில் உலா வரும் காட்டு யானை அருகே சென்று வீடியோ மற்றும் புகைப்படம் எடுப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், காட்டு யானை சாலையை கடந்து செல்லும் போது வாகனங்களை நிறுத்தி யானை கடந்து செல்ல வழிவகை செய்யவேண்டும் என்று வனத்துறையினர் தெரிவித்தனர்.

# மேட்டூர் அணையில் திறக்கப்பட்ட காவிரி நீர் திருச்சி வந்தது

திருச்சி, ஆக. 11

மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட காவிரி நீர் திருச்சிக்கு வந்தது. கம்பரசம்பேட்டை தடுப்பணையில் சுற்றலா பயணிகள் ஆனந்த குளியல் போட்டனர். மேட்டூர் அணையின் நீர்மட்டம் தற்போது 78.37 அடியாக உள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக 1,500 கன அடி மட்டும் திறந்து விடப்படுகிறது. ஆனால் கடந்த வாரம் கர்நாடக மாநிலத்தில் பெய்த பலத்த மழையின் காரணமாக அங்கிருந்து மேட்டூர் அணைக்கு 25 ஆயிரம் கன அடி நீர் திறந்து விடப்பட்டது. இதன் காரணமாகமேட்டூர்அணையின்நீர்மட்டம்உயர்ந்தது. இதனை தொடர்ந்து கடந்த 3 நாட்களுக்கு முன்பாக மேட்டூர் அணையில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறந்து விடப்பட்டது. அந்த தண்ணீர் தற்போது மாயனூர் தடுப்பணை, முக்கொம்பு மேலணையை தாண்டி திருச்சிக்கு நேற்று வந்து சேர்ந்தது. திருச்சி கம்பரசம் பேட்டை தடுப்பணையில் தண்ணீர் சீறிப்பாய்ந்து வருவதால் சுற்றுலா பயணிகள் ஆனந்த குளியல் போட்டனர். சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த இளைஞர்களும் குளிப்பதற்காக தடுப்பணையில் குவிந்தனர்.

# கர்நாடக ரசாயன கழிவுகளால் பச்சை நிறமாக மாறிய மேட்டூர் நீர்த்தேக்க பகுதி நோய் பரவும் அபாயம்

தர்மபுரி, ஆக. 11

தர்மபுரி மாவட்டம் ஏரியூர் அருகே நாகமரை, ஒட்டனூர், செல்லமுடி, பூச்சூர், சித்திரபட்டி, கவுண்டனூர் உள்பட 30க்கும் மேற்பட்ட கிராமங்கள் காவிரி கரையோரத்தில் மேட்டூர் அணையின் நீர்த்தேக்க பகுதியாக உள்ளன. இந்த கிராம மக்கள் மீன்பிடி தொழில், சிறு, குறு விவசாயம் செய்து வருகிறார்கள். மேலும் குடிநீர் உள்ளிட்ட தேவைகளுக்காகவும், இந்த மேட்டூர் நீர்த்தேக்கத்தை நம்பியே வாழ்கின்றனர். இந்த நிலையில் மேட்டூர் அணையின் நீர்த்தேக்க காவிரி கரையோரங்களில் உள்ள நீரானது பச்சை பசேலென காட்சி அளிக்கிறது. மேலும் துர்நாற்றம் வீசுகிறது.

இதன் காரணமாக இந்த நீரை விவசாயத்திற்கு மட்டுமல்லாமல் குடிநீருக்கும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் காவிரி கரையோர பகுதி முழுவதும் இந்த ரசாயன கழிவுகளால் சுகாதார கேடுஅடைந்துள்ளது.காவிரிகரையோரகிராமங்களில் ஆங்காங்கே தற்போது வைரஸ் காய்ச்சல் பரவ தொடங்கி உள்ளது.

மேட்டூர் அணையின் நீர்த்தேக்க பகுதியில் தேங்கி நிற்கும்தண்ணீர்பச்சைநிறமாகமாறிகாட்சிஅளிப்பது ஏன்? என்ற தகவல் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. அதாவது, கர்நாடக பகுதிகளில் இருந்து ரசாயன கழிவுகளைகாவிரி ஆற்றில் கலந்து விடுவதால் காவிரி நீர் அசுத்தம் அடைந்து பச்சை நிறமாக மாறி காட்சி அளிக்கிறது.

மழை வெள்ளம் அதிகமாக வரும்போது காவிரி ஆற்றில்பாய்ந்துவரும்தண்ணீரில்ரசாயனகழிவுகளும் சேர்ந்து ஆற்றில் அடித்து செல்லப்படும். அந்த தண்ணீர் ஒகேனக்கல்லை கடந்து வேகமாக வரும்போது,அதில்ரசாயனம்கலந்திருப்பதுபெரிதாக தெரிவது இல்லை. அதே நேரத்தில் மேட்டூர் அணையின் நீர்த்தேக்க பகுதியில் அந்த தண்ணீர் தற்போது தேக்கம் அடைந்து நிற்கும்போது ரசாயன கழிவுகள் அப்படியே தண்ணீரில் கலந்து விடுகிறது. இதனால்தான் கரையோர பகுதிகளில் காவிரிஆறு பச்சை நிறமாக மாறி உள்ளது.

இதுகுறித்துஅரசுஅதிகாரிகளுக்குதகவல்தெரிவித்தும் அவர்கள்எந்தவொருநடவடிக்கையும்எடுக்கவில்லை என்றுகரையோரகிராமமக்கள்குற்றம்சாட்டுகிறார்கள். ஏற்கனவே காவிரியில் தண்ணீர் தர கர்நாடக அரசு மறுத்து வரும் நிலையில், இந்த ரசாயன கழிவுகளால் காவிரி பாசன விவசாயிகளும், காவிரி குடிநீரை நம்பி இருக்கும் மக்களும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். எனவே இதுகுறித்து தமிழக அதிகாரிகள், கர்நாடக அரசிடம் பேசி தமிழ்நாட்டின் உயிர்நாடியான காவிரியில் ரசாயன கழிவுகள் கலப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர்.

மேட்டூர் அணை நீர்த்தேக்க பகுதியில் பச்சை நிறமாக தண்ணீர் மாறி உள்ளது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் கேட்ட போது. 'அணையின் நீர்த்தேக்க பகுதிகளில் தண்ணீர் வரத்து தற்போது வினாடிக்கு சுமார் 5 ஆயிரம் கனஅடியாக தான் உள்ளது. ஏரியூர் அருகே நாகமரை சுற்றுவட்டாரத்தில் உள்ள அணையின் நீர்த்தேக்க பகுதிகளை நாங்கள் பார்வையிட உள்ளோம். அங்கு தண்ணீர் பச்சை நிறமாக மாறி இருந்தால் அது குறித்து விசாரித்து எதனால் இந்த தண்ணீர் நிறம் மாறி உள்ளது என கண்டறிந்து அரசுக்கு முறைப்படி தகவல் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள்.

# ஆடு மேய்க்கும் தொழிலாளி கொன்று புதைப்பு: கள்ளக்காதலனுடன் மனைவி கைது

கர்நாடக மாநிலம் பெலகாவி மாவட்டம் சிக்கோடி தாலுகா கடகலதா கிராமத்தை சேர்ந்தவர் ரகு கவாடே (வயது 40). இவரது மனைவி பங்காரி கவாடே. ரகு ஆடு மேய்க்கும் தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார். இந்த நிலையில் பங்காரிக்கும், ரகுவின் உறவினரான ராம ராணா என்பவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. இந்த பழக்கம் நாளடைவில் கள்ளக்காதலாக மாறியது.

இருவரும் அடிக்கடி தனிமையில் சந்தித்து உல்லாசம் அனுபவித்து வந்துள்ளனர். இந்த கள்ளத்தொடர்பு விவகாரம் ரகுவிற்கு தெரியவந்துள்ளது. இதனால் அவர் மனைவி பங்காரி மற்றும் உறவினர் ராம ராணா ஆகியோரை கண்டித்துள்ளார். ஆனாலும் அவர்கள் கள்ளத்தொடர்பை கைவிடவில்லை என தெரிகிறது. இந்த நிலையில் கள்ளக்காதலுக்கு இடையூறாக இருக்கும் ரகுவை தீர்த்துக்கட்ட பங்காரியும், ராம ராணாவும் முடிவு செய்தனர். அதன்படி அவர்கள் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு ரகுவை கழுத்தை நெரித்து கொலை செய்தனர். பின்னர் அவரது உடலை அங்குள்ள தோட்டத்தில் குழி தோண்டி புதைத்தனர். இதையடுத்து பங்காரி, கணவர் ஆடு மேய்ப்பதற்காக வெளியூருக்கு சென்றிருப்பதாக குடும்பத்தினரிடம் தெரிவித்து வந்துள்ளார். ஆனால் நீண்ட நாட்களாக ரகு திரும்பி வராததால் சந்தேகம் அடைந்த அவரது அண்ணன் லகமன்னா, இதுபற்றி சிக்கோடி போலீசில் புகார் அளித்தார்.

இதையடுத்து போலீசார் பங்காரியை பிடித்து விசாரித்தனர். அப்போது அவர் முன்னுக்கு பின்



முரணாக பதில் அளித்ததால் சந்தேகம் அடைந்த போலீசார், பங்காரியிடம் கிடுக்கிப் பிடி விசாரணை நடத்தினார்கள். விசாரணையில், கள்ளக்காதலனுக்கு இடையூறாக இருந்ததால் கள்ளக்காதலன் ராம ராணாவுடன்சேர்ந்துகணவர்ரகுவைபங்காரிகொன்று உடலை தோட்டத்தில் புதைத்தது தெரியவந்தது.

இதையடுத்து போலீசார் பங்காரியையும், அவரது கள்ளக்காதலன் ராம ராணாவையும் கைது செய்தனர். பின்னர் ரகுவின் உடலை புதைத்த இடத்தையும் அவர்கள் போலீசாரிடம் அடையாளம் காட்டினர். பின்னர் போலீசார் ரகுவின் உடலை தோண்டி எடுத்து பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர். இதுகுறித்து சிக்கோடி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

# தனியார் ஆஸ்பத்திரியில் பெண் ஊழியருக்கு பாலியல் தொல்லை: 2 பேர் கைது

நெல்லை வண்ணார்பேட்டையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் பெண் ஊழியருக்கு பாலியல் தொல்லை கொடுத்த அசாம் வாலிபர்கள் 2 பேரை போலீசார் கைது செய்தனர்.

அசாம் மாநிலம் காம்ருப் மாவட்டத்தை சேர்ந்தவர் காளிபார் ரகுமான், இவரின் மகன் ஹபிபர் ரகுமான் (வயது 28). இவர்கள் இவரும் அசாம் மாநிலம் சர்பரி மாவட்டத்தை சேர்ந்த அன்வர் அலி மகன் அஸிமுல் அலி (22) என்பவருடன் சேர்ந்து தூத்துக்குடி மாவட்டம் பெரியதாழையில் தங்கியிருந்து தொழிலாளியாக வேலைபார்த்து வருகிறார்கள்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு அஸிமுல் அலியின் உறவினர் ஒருவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு, நெல்லை வண்ணார்பேட்டையில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். அவரை பார்ப்பதற்காக நேற்று மாலையில் அஸிமுல் அலி மற்றும் ஹபிபர் ரகுமான் ஆகியோர் அந்த ஆஸ்பத்திரிக்கு சென்றுள்ளனர்.




அங்கு அவர்கள் இருவரும் சேர்ந்து ஆஸ்பத்திரியில் பணியில் இருந்த 22 வயது பெண் ஊழியருக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இதனையடுத்து ஆஸ்பத்திரி நிர்வாகம் சார்பில் பாளையங்கோட்டை போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார்சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று அஸிமுல் அலி, ஹபிபர் ரகுமான் ஆகியோரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பட்டாசு தொழிலை பாதுகாக்க வலியுறுத்தி மாரத்தான்: 91 வயது முதியவர் 21 கி.மீ. ஓடி அசத்தல்

விருதுநகர், ஆக. 11

சிவகாசியில் பட்டாசு தொழிலை பாதுகாக்க வலியுறுத்தி நடைபெற்ற மாரத்தான் போட்டியில் 91 வயது முதியவர் 21 கி.மீ. ஓடி அசத்தினார்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியின் பிரதான தொழிலான பட்டாசு தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் விதமாக விழிப்புணர்வு மாரத்தான் போட்டி சிவகாசியில் நேற்று காலை நடைபெற்றது.

இந்த மாரத்தான் ஓட்டத்தில் 10 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். ஆண்களுக்கு 42 மற்றும் 21 கி.மீ. தூரமும், பள்ளி மாணவர்கள் மற்றும் பெண்களுக்கு 10 கி.மீ. தூரமும், பள்ளி மாணவிகளுக்கு 5 கி.மீ. தூரமும் நிர்ணயம் செய்யப்பட்டு 5 பிரிவுகளாக போட்டி நடைபெற்றது.

இவர்களுடன் இணைந்து 91 வயது ராஜேந்திரன் 21 கி.மீ. பிரிவில் ஓடி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்.இவர்சர்வதேசமுதியோர்தடகளபோட்டியில் பங்கேற்றுஇந்தியாவிற்காகஏராளமானபதக்கங்களை குவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. மேலும் ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் 10 இடங்களை பிடித்த அனைவருக்கும் பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
11.08.2026

# காவிரி விவகாரத்தில் தமிழக அரசின் மனு உச்சநீதிமன்றத்தில் 13-ம் தேதி விசாரணை

சென்னை, ஆக. 11

தமிழ்நாடு கர்நாடகா இடையே காவிரி தொடர்பான பிரச்னை இருந்து வருகிறது.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு காவிரி ஆற்றில் இருந்து தமிழ்நாட்டிற்கு 15 நாட்களுக்கு 3500 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று காவிரி ஒழுங்காற்றுக் குழு மற்றும் காவிரி மேலாணமை ஆணியம் கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டிருந்தது. இதற்கு கர்நாடக முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் உட்பட பல்வேறு அமைப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

காவிரி விவகாரம் தொடர்பாக கர்நாடக மாநில அனைத்துக் கட்சிக் கூட்டம் அம்மாநில முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதனையடுத்து செய்தியாளர்களை டி.கே.சிவக்குமார், 'காவிரி விவகாரத்தில் கர்நாடகா மக்கள் மற்றும் விவசாயிகளின் நலனை காப்பதே முதன்மையானது என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவின் உத்தரவுகளின்படி கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறந்து விட வலியுறுத்தி தமிழ்நாடு அர்சு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த மனுவை விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்று தலைமை நீதிபதி சூரியகாந்த் முன்பு தமிழ்நாடு அரசு தரப்பு வழக்கறிஞர் சி.எஸ். வைத்தியநாதன் முறையிட்டார்.

இந்த முறையீட்டை ஏற்று காவிரி நீர் விவகாரம் தொடர்பாக தமிழக அரசின் மனு மற்றும் அது தொடர்பான பிற மனுக்களும் வருகின்ற ஆகஸ்ட் . 13ஆம் தேதி விசாரணைக்கு எடுக்கப்படும் என்று உச்சநீதிமன்றம் உறுதி அளித்தது.



சமத்துவ மக்கள் கழகம் சார்பாக காமராஜரின் 124 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் எர்ணாவூர் நாராயணன் தலைமையில் நடைபெற்றது. இதில் லதா நாராயணன் குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

# பூந்தமல்லியில் ஆஞ்சநேயர் கோயில் தெருவில் பிரசித்தி பெற்ற பழமையான ஸ்ரீ தேவி முத்துமாரியம்மன் கோயிலில் 54ம் ஆண்டு ஆடித் திரு விழா

பூந்தமல்லியில் ஆஞ்சநேயர் கோயில் தெருவில் பிரசித்தி பெற்ற பழமையான ஸ்ரீ தேவி முத்துமாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. இந்த கோயிலின் 54ம் ஆண்டு ஆடித் திரு விழா மற்றும் 4 வது வாரம் ஆடித்திருவிழாவை முன்னிட்டு 19ம் ஆண்டு பால்குடம் எடுக்கும் நிகழ்ச்சி ஆன்மீக வள்ளல் மு.எம்.எல்.ஏ. அருள்அன்பரசு ஏற்பாட்டில் நடைபெற்றது. பூந்தமல்லி ட்ரங்க் சாலையில் உள்ள பனையாத்தம்மன் கோயிலில் இருந்து ஆயிரம் பெண் பக்தர்கள் பால்குடம் ஊர்வலம் புறப்பட்டு ஸ்ரீதேவி முத்துமாரியம்மன் கோயில் வந்தடைந்தது. இதில் அருள் மீனாட்சி உள்பட 1500க்கும் மேற்பட்ட பெண் பக்தர்கள் பால்குடம் எடுத்து வந்து அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து வழிபட்டனர்.இதனைத் தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகாதீபாரதனை, பூஜைகள் நடைபெற்றன.அதனை தொடர்ந்து மேள தாளத்துடன் வானவேடிக்கையுடன் பக்தர்கள் அம்மன், பிள்ளையார், சிவன் வேடம் அணிந்து கையில் வேல் மற்றும் சூலம் ஏந்தி பக்தி பரவசத்துடன் நடனமாடியபடி கோயிலில்வந்துஅம்மனைவழிபட்டனர். இதில் பூந்தமல்லி சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து அம்மனை தரிசனம் செய்தனர். பின்னர் தீபாராதனையும் பக்தர்களுக்கு அன்ன தானமும்வழங்கப்பட்டது.இந்தகோயிலின்ஆடிதிருவிழா கமிட்டியாளர்களான விழாக் குழு தலைவர் எல். ராதாகிருஷ்ணன், விழா செயலாளர்கள் ப.சேகர், பி.பழனி, ஆர்.எம்.சேகர், விழா துணை தலைவர் பி.மாதவன், விழா பொருளாளர் எஸ். சீதாராமன் மற்றும் ஜி.ஆர்.திருமலை, தொழிலதிபர்சுரேஷ், கவிதாசுரேஷ், அசோக்குமார், தங்கம் திருமலை, ஜெயக்குமார், நடிகர் தரணிதரன், செல்வராஜ், முகுந்தன் உள்பட முக்கிய பிரமுகர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை சார்பில் போதைப்பொருள் தடுப்பு குறித்து கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அக்ஷய் அனில் வாகரே, இ.கா.ப., அவர்களின் தலைமையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரியம்பட்டி கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே போதைப்பொருள் தடுப்பு மற்றும் அதன் தீய விளைவுகள் குறித்து விழிப்புணர்வு மற்றும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மாணவ, மாணவியர்களிடையே விழிப்புணர்வு உரையாற்றினார். அப்போது, இளைஞர்கள் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து முற்றிலும் விலகி, கல்வி மற்றும் நற்பண்புகளில் கவனம் செலுத்தி, நாட்டின் முன்னேற்றத்திற்கு தங்களது பங்களிப்பை வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும் போதைப்பொருள்விற்பனை, கடத்தல்அல்லதுபயன்பாடு தொடர்பான தகவல்கள் ஏதேனும் தெரியவந்தால், உடனடியாககாவல்துறைக்குதகவல்தெரிவிக்கவேண்டும் என மாணவ, மாணவியர்களிடம் கேட்டுக்கொண்டார்.

# இன்றைய ராசி பலன்கள் (11.08.2026)

**மேஷம்:** சிந்தித்துச் செயல்பட வேண்டிய நாள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் வரவு செலவில் கவனம் தேவை. உணர்ச்சிவசப்படாமல் பொறுமையைக் கையாளுங்கள்.

**ரிஷபம்:** நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும் நாள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தினருடன் செலவிடும் நேரம் மன அமைதியைத் தரும்.

**மிதுனம்:** தேடிவரும் நாள். நிலுவையில் இருந்த பணிகள் விரைவாக முடியும். நிதி நிலை சீராக இருக்கும்.

**கடகம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். சுபச் செய்திகள் வந்து சேரும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளில் கவனத்துடன் ஈடுபட வேண்டும். பயணங்களின் போது எச்சரிக்கை தேவை. மாலையில் மன அமைதி தரும் சூழல் அமையும்.

**கன்னி:** பணிபுரியும் இடத்தில் நற்பெயரும் மதிப்பும் உயரும். கணவன்மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். நிதி நிலைமை பலப்படும்.

**துலாம்:** பணியிடத்தில் பொறுப்புகள் அதிகரிக்கலாம், ஆனால் உங்கள் உழைப்பிற்கேற்ற நற்பலன்கள் கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும். வியாபாரத்தில் புதிய திட்டங்களைச் செயல்படுத்த சாதகமான நாள். பேச்சில் நிதானம் தேவை.

**தனுசு:** உத்தியோகத்தில் எதிர்பாராத முன்னேற்றமும்பாராட்டும்கிடைக்கும். நண்பர்கள் வழியில் உதவி கிட்டும். ஆரோக்கியத்தில் சற்று கவனம் செலுத்துவது நல்லது.

**மகரம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். எதிர்பார்த்த பண வரவு கைக்கு வந்து சேரும். சுப நிகழ்ச்சிகளுக்கான பேச்சுகள் சுமுகமாக முடியும்.

**கும்பம்:** தொழிலில் புதிய வாய்ப்புகள் கதவைத் தட்டும். புதிய முதலீடுகளைத் திட்டமிடலாம். தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.

**மீனம்:** திட்டமிட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். சகஊழியர்களின்ஒத்துழைப்பு கிடைக்கும். ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.



கலைவளர்க்கும் தலைநகராம் சென்னை மைலாப்பூரில் உள்ள கற்பகம் இன்டர்நேசனல் ஹோட்டலரங்கில் நடந்தகொற்றவை விருதுகள் நிகழ்வு விழாவில் உயிர்மெய்த்தமிழ்ச் சங்க, உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க மாநிலத் தலைவர் சேலத்து பாரதி சொற்கோசொல்லரசர் அவர்களுக்கு கலைமாமணி, நடிகை அம்பிகா, மேகலா சித்ரவேல், தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் ரஞ்சித், டாக்டர் கொற்றவை நாகராஜன் ஆகியோர் இணைந்து "வெந்தனல் வேங்கை" எனும் விருதினை வழங்கினர். இந்நிகழ்வில் சேலம் களரம்பட்டி பா.தினேஷ்குமார், சின்ன கொல்லப்பட்டி த.விக்னேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நடிகர் மகேஷ்பாபுவின் பிறந்தநாளை முன்னிட்டு, 'வாரணாசி' படத்தின் அப்டேட் வெளியீடு!




தெலுங்கு சூப்பர்ஸ்டார் மகேஷ் பாபுவின் பிறந்த நாளை முன்னிட்டு, பெரிதும் எதிர்பார்க்கப்படும் காவிய திரைப்படமான 'வாரணாசி' படக்குழு 'ருத்ரா'வின் கதாபாத்திரத்தை உலகுக்கு முதன்முறையாக அறிமுகப்படுத்தும் வகையில் இரண்டு பிரத்யேக புகைப்படங்களை வெளியிட்டுள்ளது.

முதல் புகைப்படம் அடர்ந்த வனப்பகுதியின்நடுவேமூங்கில்தெப்பத்தில் ஓய்வெடுக்கும் ருத்ராவை காண்பிக்கிறது. இதில் அவர் இயல்பான கம்பீரத்துடனும், கவனம் ஈர்க்கும் தன்மையுடனும் தனது கதாபாத்திரத்திற்கே உரித்தான அமைதியான தோற்றத்துடனும் காட்சியளிக்கிறார்.

இரண்டாவது புகைப்படம் நம்மை கென்யாவின் மாசாய் மாரா ( Maasai Mara) சமவெளிகளுக்கு அழைத்துச் செல்கிறது. அங்கு ஒட்டகச்சிவிங்கிகள் மற்றும் வைல்ட்பீஸ்ட் ( Wildebeest) விலங்குகளுக்கு நடுவே நிற்கும் ருத்ரா மறுக்க முடியாத அதிகார தோரணையில் பின்னோக்கி பார்க்கிறார்.


இந்த இரண்டு புகைப்படங்களும் வாரணாசி #VARANASI படத்தின் ஆன்மாவை நமக்கு உணர்த்துகின்றன. இது உலகம் முழுவதும் பயணிக்கும்... ஒரு நூற்றாண்டு காலத்தை உள்ளடக்கிய காவியமாகும். இதில் ஒரு மனிதனின்அசாதாரணமானபயணம்அவரைஇந்தியாவின் புனித நீர் நிலைகளில் இருந்து பூமியின் மிகவும் காட்டுமிராண்டித்தனமான மற்றும் அடர்ந்த வனப்பகுதிகளுக்கு அழைத்துச் செல்கிறது.

இது தொடர்பாக இயக்குநர் எஸ். எஸ். ராஜமவுலி குறிப்பிடுகையில்.., ''தன்னைவிட பெரியதொரு நோக்கத்தை நிறைவேற்றவே ருத்ராபிறந்தான். அவன்தான் கோராத ஒரு விதியை சுமந்து கொண்டிருக்கிறான். அவன் நகைச்சுவை உணர்வு மிக்கவன். அதே தருணத்தில் மென்மையானவனும் கூட. அத்துடன் அவன் மிகக் கடுமையானவனும் ஆவான். அந்த பரிமாணங்களை தான் மகேஷ் பாபு அக்கதாபாத்திரத்திற்குள் கொண்டு வந்தார். யாராலும் கடுமையான தோற்றத்தை வெளிப்படுத்த முடியும். ஆனால் ஒரே தருணத்தில் கடுமையையும்... மென்மையையும்... வெளிப்படுத்தக் கூடியவர்கள் மிகச் சிலரே.

இந்த காட்சிகள் எங்களின் ஆப்பிரிக்க படப்பிடிப்பு தளத்தில் எடுக்கப்பட்டவை. எந்த ஒரு செயற்கையாக அமைக்கப்பட்ட அரங்கங்களாலும் தர இயலாத ஒன்றை...அந்தநிலபரப்புஎங்களுக்கு வழங்கியது. கிளிமஞ்சாரோமற்றும்மாசாய்மாராசமவெளி பகுதிகளில் படப்பிடிப்பு நடத்திய போது... நான் வியந்து போனேன். காலை நேரங்களில் எங்கள் கண்முன் விரிந்து கிடந்த காட்சிகளை 1:43:1 ஐமேக்ஸ் ( IMAX) திரையால் கூட முழுமையாக உள்வாங்க முடியாது என்று நான் உணர்ந்தேன்'' என்றார் .

எஸ்.எஸ்.ராஜமவுலிஇயக்கத்தில்எம்.எம்.கீரவாணியின் இசையில் உருவாகும் 'வாரணாசி#VARANASI' திரைப்படத்தை ஸ்ரீ துர்கா ஆர்ட்ஸ் ( Sri Durga Arts) மற்றும் ஷோயிங் பிசினஸ் ( Showing Business) ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன. இந்த திரைப்படம் 2027 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஏழாம் தேதி முதல் உலகம் முழுவதும் ஐமேக்ஸ் ( IMAX) தொழில்நுட்பத்தில் வெளியாகிறது.

# விஜய் சேதுபதியின் 'ஸ்லம் டாக் : 33 டெம்பிள் ரோடு' படத்தின் 'கேரக்டர் கிளிம்ப்ஸ்' வெளியீடு!



இப்படத்தில் சக்தி வாய்ந்த அதிகாரி கௌரி ஹெக்டேவாக நடிக்கும் நடிகை தபு கதாபாத்திரத்தை, சுவராசியமானபிரத்யேக முன்னோட்டத்தின் மூலம் படக்குழு அறிமுகப்படுத்தி இருக்கிறது.

துடிப்பான திரைப்பட இயக்குநர் பூரி ஜெகன்நாத்தையும், புகழ் பெற்ற நடிகரான 'மக்கள் செல்வன்' விஜய் சேதுபதியையும் முதல் முறையாக ஒன்றிணைத்துள்ள பான் இந்திய ஆக்சன் என்டர்டெய்னர் படமான 'ஸ்லம் டாக் : 33 டெம்பிள் ரோடு' திரைப்படம் உண்மையான உணர்ச்சிகள் அதிரடியான சண்டைக் காட்சிகள் புதிரான மர்மம் ஆகியவற்றின் கலவை என உறுதியளிக்கிறது.

கௌரி ஹெக்டேவாக நடிக்கும் தபுவின் ஃபர்ஸ்ட் லுக்கை வெளியிட்ட பிறகு, படக் குழுவினர் தற்போது அவரது ஆளுமை மிக்க கதாபாத்திரத்தை மேலும் விவரிக்கும் வகையில்... ஒரு ஆற்றல் பெற்ற பிரத்யேக முன்னோட்டத்தை வெளியிட்டுள்ளனர்.

நகரின் சேரி பகுதிகளை பின்னணியாகக் கொண்ட இந்தமுன்னோட்டம்..படத்தின் கடினமான உலகத்தை நிலை நிறுத்த தொடங்கி, பின்னர் தபுவை ஒரு குறிப்பிடத்தக்க விதத்தில் அறிமுகப்படுத்துகிறது. அவர்ஒருகாரில்வந்துசிகரெட்டை பற்ற வைத்து.. உடனடியாக நிலைமையை கட்டுப்பாட்டிற்கு கொண்டு வருகிறார். ஒரு உள்ளூர் ரவுடிக்கு அவர் விடுத்த கடுமையான எச்சரிக்கையும்... அதைத் தொடர்ந்து அவர் கொடுத்த 'பளார்' என்ற அறையும்... கௌரி ஹெக்டே அதிகாரத்தைத் தேடுபவர் அல்ல... அதை கோருபவள் என்பதை உடனடியாக பிரதிபலிக்கிறது.

# இலங்கை டெஸ்ட் தொடர்: சாய் சுதர்சனுக்கு பதிலாக சர்ப்ராஸ் கான் சேர்ப்பு



இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து காயம் காரணமாக விலகிய சாய் சுதர்சனுக்குப் பதிலாக சர்பராஸ் கான் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்திய அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான இந்த டெஸ்ட் தொடர் வருகிற 15ம் தேதி முதல் தொடங்குகிறது.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர் தொடங்குவதற்கு முன்பாக இந்திய அணியிலிருந்து காயம் காரணமாக ஜஸ்பிரித் பும்ரா, வாஷிங்டன் சுந்தர் விலகினர். அதன் பின், காயம் காரணமாக சாய் சுதர்சனும் விலகினார்.

இந்த நிலையில், காயம் காரணமாக இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து விலகிய சாய் சுதர்சனுக்கு பதிலாக அணியில் சர்பராஸ் கான் சேர்க்கப்பட்டுள்ளார்.

# மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டியில் குறவன்குளம் கலைவாணர் அணி முதல் பரிசு: 24 அணிகள் பங்கேற்பு!!



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே சின்ன ஊர்சேரி பிரிவில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டியில் 24 அணிகள் பங்கேற்றனர். இதில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த அணிகள் மோதின. முடிவில் குறவன்குளம் கலைவாணர் விளையாட்டுக் கழகம் முதல் பரிசு மற்றும் 2–ம் பரிசு அழகர்கோவில் சண்டியர் பாய்ஸ், 3–ம் பரிசு யா.ஒத்தக்கடை, 4–ம் பரிசு கட்டப்புளி நகர் அணி பெற்றது. விளையாட்டு போட்டிகளில் பங்கேற்ற அனைவரும் காலை, மதியம் உணவு வழங்கப்பட்டது. இந்த ஏற்பாடுகளை உல்லாசப்பறவை கிரிக்கெட் கிளப் ஒருங்கிணைப்பாளர் A. P.சரவணக்குமார் (எ) சர்வான் டிஸ்ஸி செய்து இருந்தார்.

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர்: இந்திய அணி அறிவிப்பு சர்பராஸ் கானுக்கு மீண்டும் இடம்




இந்தியா–இலங்கை அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் வரும் 15 ம் தேதி தொடங்குகிறது. இந்த தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா–இலங்கை அணிகளுக்கு இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் வரும் ஆகஸ்ட் 15ம் தேதி தொடங்குகிறது. முதல் டெஸ்ட் போட்டி ஆகஸ்ட் 15 முதல் 19ம் தேதி வரை காலேவில் நடைபெறுகிறது. 2வது டெஸ்ட் போட்டி ஆகஸ்ட் 23 முதல் 27ம் தேதி வரை கொழும்பில் நடைபெற உள்ளது. இந்தத் தொடர் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் 2025–27 தொடரின் ஒரு பகுதியாகும். தற்போது வேர்ல்ட் டெல்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் இந்தியா 48.15 சதவீத புள்ளிகளுடன் 5வது இடத்திலும், இலங்கை 41.67 சதவீத புள்ளிகளுடன் 6வது இடத்திலும் உள்ளன. இதனால் இரு அணிகளுக்கும் இந்தத் தொடர் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. சுப்மன் கில் தலைமையில் இந்திய அணி ந்த நிலையில், இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அணிக்கு சுப்மன் கில் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய அணி: ★ சுப்மன் கில் (கேப்டன்) ★ குர்னூர் பிரார் ★ ரவீந்திர ஜடேஜா ★ சரண்ஷ் ஜெயின் ★ யஷஸ்வி ஜெய்ஸ்வால் ★ துருவ் ஜூரல் ★ சர்பராஸ் கான் ★ பிரசித் கிருஷ்ணா ★ ஆகிப் நபி ★ தேவ்தட் படிக்கல் ★ ரிஷப் பண்ட் ★ கே.எல்.ராகுல் ★ முகமது சிராஜ் ★ மனவ் சுதர் ★ குல்தீப் சுதர் இதற்கிடையில், ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டிருந்த இந்திய அணியின் முன்னணி பேட்ஸ்மேன் சாய் சுதர்சன் காயம் காரணமாக தொடரில் இருந்து விலகியுள்ளார். சாய் சுதர்சனின் வலது கால்விரலில் ஏற்பட்ட ஸ்ட்ரெஸ் ரியாக்ஷன் காயத்தின் காரணமாக விலகியதால் சாய் சுதர்சனுக்கு மாற்று வீரராக சர்பராஸ் கான் இந்திய டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலும், இந்திய அணியில் காயம் காரணமாக ஏற்கனவே ஜஸ்பிரித் பும்ரா, வாஷிங்டன் சுந்தர் உள்ளிட்ட வீரர்கள் இலங்கை தொடரில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.